தமிழ் மொழியும் இலக்கியமும்

மாணவர்களுக்கான விடுமுறைக் கால விசேட செயலட்டை

தரம் 10,11 மாணவர்களுக்கானது

இலக்கண வினாக்கள்

(பகுதி – I,II)

ஆசிரியர் – இரா. நிஷாந்தன்
கிளி/இராமநாதபுரம் ம.வி
கிளிநொச்சி கல்வி வலயம்
(தொலைபேசி – 0770577895 – viber, whatsapp)

வினாத் தொகுதி – 01

(இலக்கணப் பகுதி சார்ந்த வினாக்கள்)

01. பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1. நித்திலப் புன்னகை சுடர் வீசிட.. இங்கு **நித்திலம்** என்பதன் ஒத்த கருத்து?

i. முத்து ii. நிலா

iii. முகம் iv. ஒளி

2. தெள் நீர்க் கயத்து சிறுமீன்.. **கயம்** என்பதன் ஒத்த கருத்து?

i. குளம் ii. நீர் ஓடும் வாய்க்கால்

iii.கடல் iv. கிணறு

3. எள்துணையானும் இரவாது தான் ஈதல் எத்துணையும் ஆற்றல் இனிது.. **இரத்தல்** என்பதன் ஒத்த கருத்து?

i. கொடுத்தல் ii. வாங்குதல்

iii.அளித்தல் iv. மறுத்தல்

4. மாகமடங்கலும் மால்விடையும்.. **மடங்கல்** என்பதன் ஒத்த கருத்து?

i. யானை ii. நெருப்பு

iii.சிங்கம் iv. காளை

5. எழுந்த கொழுங்கனலென்ன எழுந்தார்.. **கனல்** என்பதன் ஒத்த கருத்து?

i. நீர் ii. நெருப்பு

iii.வானம் iv. மழை

6. பூத்தஜோதி வதனம் திரும்பு மேல்.. **வதனம்** என்பதன் ஒத்த கருத்து?

i. கண் ii. முகம்

ii. நெற்றி iv. கூந்தல்

7. புல்லர் நல்லோரை அறியார்.. **புல்லர்** என்பதன் எதிர்க்கருத்து?

i. அறிவில்லாதவர் ii. அறிவுடையவர்

iii.குழப்பமானவர் iv. அறிமுகமில்லாத

8. நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு அனுகூலமாய் அமைந்தது. **அனுகூலம்** என்பதன் எதிர்க்கருத்து ?

i. நன்மை ii. சாதகம்

iii.பிரதிகூலம் iv.இன்னல்

9. மதியினில் புலை நாத்திகம் கூறுவர்.. **நாத்திகன்** என்பதன் எதிர்க்கருத்து

i. ஆத்திகன் ii. அறிவில்லாதவன்

iii.அறிவுடையோன் iv. கல்லாதவன்

10. நாயணையார் கேண்மை கெழீஇக் கொளல்.. **கேண்மை** என்பதன் எதிர்க்கருத்து

i. நட்பு ii. தோழமை

iii.பகைமை iv. உறவு

11. பாணன் சீறி யாழை மீட்டினான்.. **பாணன்** என்பதன் எதிர்ப்பாற்ச் சொல்?

i. பாணி ii. பாணாள்

iii. பாடினி iv. பாணித்தி

12. வேடன் காட்டில் வேட்டையாடினான். **வேடன்** என்பதன் எதிர்ப்பாற்ச்சொல்

i. வேடினி ii. வேடுவிச்சி

iii.வேட்டி iv. வேட்டுவத்தினி

13. பிறிற்றோ தலைசிறந்த நிபுணன். **நிபுணன்** என்பதற்குரிய எதிர்பாற்ச்சொல்

i. நிபுணை ii. நிபுணி

iii.நிபுணச்சி iv. நிபுணாள்

14. அரக்கர் கோமான் இராவணன். **கோமான்** என்பதன் எதிர்ப்பாற்ச்சொல்

i. கோமாளி ii. கோமாள்

iii.கோமாட்டி iv. கோமகள்

15. இராமபிரான் காட்டிற்கு சென்றான். **பிரான்** என்பதன் எதிர்ப்பாற் சொல்

i. பிராட்டி ii. பிரானி

iii.பிரமானி iv. பிராட்டினி

16. பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம். **அப்பீல்** என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்?

i. முறையீடு ii. தீர்ப்பு

iii.மேன்முறையீடு iv. விளக்கம்

17. இப்பொழுது கிளைமைட் சரியில்லை.. **கிளைமைட்** என்பதற்குரிய தமிழ்ச்சொல்?

i. காலநிலை ii. வானிலை

iii.சூழ்நிலை iv. வெளிச்சம்

18. அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட் நிதியமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டது. **பட்ஜெட்** என்பதற்குரிய தமிழ் சொல்

i. முதலீடு ii. வருமான அறிக்கை

iii.பாதீடு iv. நிதியறிக்கை

19. இன்று சூப்பர் மாக்கெட்டின் பயன்பாடு அதிகளவில் உள்ளது. **சூப்பர் மாக்கெட்** என்பதன் தமிழ்ச்சொல் வடிவம்

i. அல்லங்காடி ii. சிறப்பு அங்காடி

iii.பெரிய அங்காடி iv. பொருட்சாலை

20. இப்போது மீடியாவின் செயற்பாடு சிறப்பாக உள்ளது**. மீடியா** என்பதற்குரிய தமிழ்ச் சொல்

i. புகைப்படம் ii. காணொளி

iii.ஊடகம் iv. வலைத்தளம்

21. யானையின் ஆண் களிறு என்பது போல குதிரையின் ஆண் யாது?

i. குண்டு ii. வடவை

iii.போத்து iv. அளகு

22. புலியின் ஆண், பெண் என்பவற்றின் மரபுப் பெயரை சரியாகக் குறிப்பது

i. போத்து, அளகு ii. போத்து, வடவை

iii.போத்து, பிணா iv. போத்து, பெட்டை

23. போத்து எனும் ஆண் மரபுப் பெயரைக் கொண்ட விலங்குகள் முறையே.

i. ஆடு, புலி ii. புலி, மயில்

iii. புலி, சிங்கம் iv. புலி, நரி

24. குரங்கின் ஆண் கடுவன் என்பது போல நரியின் ஆணைக் குறிப்பது

i. குண்டு ii. ஓரி

iii. பாட்டி iv. பெட்டை

25. மானின் ஆண், பெண் என்பவற்றின் மரபுப் பெயர்கள்

i. கலை, பிணா ii. கலை, பிணை

iii.கலை, பாட்டி iv. கலை, பெட்டை

26. பாத்திரம், கப்பல், ஆபரணம் எனும் பல பொருள் குறிக்கும் ஒரு சொல்?

i. கலம் ii. அணி

iii.நகை iv. தழை

27. சிரிப்பு, ஆபரணம், இகழ்ச்சி, பல் எனும் பல பொருள் தரும் சொல்?

i. புன்னகை ii. நகை

iii.முறுவல் iv. அணி

28. குதிரை, தானியப்பொடி, பெரிய எனும் பல பொருள் தரும் சொல்?

i. அரி ii. பரி

iii.பொடி iv. பெரிய

29. பிஞ்சு, தழும்பு, காயம் எனும் பல பொருள் தரும் சொல்?

i. மூசு ii. தாயம்

iii.வடு iv. கறை

30. பாட்டு, கவிஞன், குரங்கு எனும் பொருள்களை குறிக்கும் சொல்?

i. புலவன் ii. அணி

iii.கவி iv. பா

31. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன எவ்வாறு அழைக்கப்படும்?

i. ஐந்திணை ii. ஐந்திலக்கணம்

iii.ஐம்பொறிகள் iv. ஐங்கணைகள்

32. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன குறிப்பது

i. ஐம்பொறிகள் ii. ஐம்புலன்கள்

iii.ஐங்கணை iv. ஐங்குரவர்

33. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன

i. நாற்குணம் ii. நாற்பொருள்

iii.நாற்ச் சொல் iv. நாற்படை

34. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன

i. ஐந்திணை ii. ஐம்பொறிகள்

iii.ஐங்கணை iv. ஐங்காயம்

35. அறம், பொருள், இன்பம், வீடு என்பன

i. நாற்பலன் ii. நாற்பொருள்

iii.நாற்றிசை iv. நாற்திணை

36. அரசாங்கம் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ..... வழங்கியது.

i.இழப்பீடு ii. மதிப்பீடு

iii.காப்பீடு iv. முதலீடு

37. குற்றவாளி ஒருவரை குறித்த நாளுக்குள் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்குமாறு நீதிபதியால் ..... விடுக்கப்பட்டது

i. அழைப்பாணை ii. பிடியாணை

iii.கோரிக்கை iv. ஆட்கொணர்வுமனு

38. வீதி அபிவிருத்தி அதிகாரசபை பழுதடைந்த வீதிகளை ..... செய்தது

i. வடிவமைப்பு ii. கட்டமைப்பு

iii.புனரமைப்பு iv. ஒழுங்கமைப்பு

39. எழுத்தாளரால் வெளியிடப்பட்ட அந்த நூல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட ..... பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது

i. விமர்சனம் ii. விளம்பரம்

iii.பாயிரம் iv. நன்றியுரை

40. வேலைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ விளம்பரம் ..... வெளிவந்தது.

i. அறிக்கையில் ii. வர்த்தமானியில்

iii.வெள்ளையறிக்கையில் iv. சுற்றுநிருபத்தில்

41. தமிழ்த்தின போட்டிகள் பற்றிய ..... கல்வியமைச்சினால் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கபட்டது

i. சுற்று நிருபம் ii. விண்ணப்பம்

iii.அறிக்கை iv. விளம்பரம்

42. ஆரோக்கிய வாழ்வு பற்றி மாணவர்களுக்கு ..... வழங்கப்பட்டது

i. ஒத்துழைப்பு ii. கண்காணிப்பு

iii.விழிப்புணர்வு iv. பாதுகாப்பு

43. அவன் வீட்டுக்கு வந்தாலன்றி நான் பொருள்.....

i. கொடேன் ii. கொடுப்பேன்

iii.கொடுத்திருப்பேன் iv. கொடுப்பதில்லை

44. நாட்டின் வரலாற்றை உணர்த்துவனவாய் உள்ள தொல்பொருட்கள்……..
காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

i. திறைசேரியில் ii. நூதனசாலையில்

iii.சுவடிச்சாலையில் iv. ஆவணக்காப்பகத்தில்

45. கைது செய்யப்பட்ட தனது மகனின் விபரம் அறியாத தாய் நீதி மன்றத்தில்…… சமர்ப்பித்தார்

i. வேட்பு மனு ii. ஆட்கொணர்வு மனு

iii.முறைப்பாடு iv. வழக்கு

46. விபத்தில் ஏற்படக்கூடிய இழப்பை நிவர்த்திப்பதற்கு தனிநபரோ அல்லது நிறுவனமோ முன்கூட்டியோ செய்து கொள்வது.

i. சேமிப்பு ii. மானியம்

iii.முதலீடு iv. காப்புறுதி

47. கடும் மழை பொழிந்தமையால் குளங்கள்……..

i. ஒவ்வொன்றும் நிறைந்தது ii. எல்லாம் நிறைந்தன

iii.ஒவ்வொன்றாக நிறைந்தன iv.எல்லாம் நிறைந்தது

48. பெட்டியில் இருந்த ஒவ்வொரு மாம்பழமும் …….

i. அழுகியிருந்தது ii. அழுகியிருந்தன

iii.அழுகியிருக்கும் iv. அழுகின

49. ஒவ்வொரு பூவும் …….

i. அழகானது ii. அழகானவை

iii.அழகற்றவை iv. அழகானவைகள்

50. குசேலன் கண்ணனைக் காணச் செல்லும் போது…… அவல் கொண்டு சென்றான்

i. ஊதியமாக ii. தட்சணையாக

iii.கையுறையாக iv. காணிக்கையாக

வினாத் தொகுதி – 02

(இலக்கணப் பகுதி சார்ந்த வினாக்கள்)

- **பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையினை எழுதுக.**

01. அறிஞர் அவை என்பது போல மயிலுக்கு யாது?

……

02. கரும்பு கொல்லை என்பது போல புகையிலைக்கு?

……

03. ஆடு மந்தை என்பது போல யானைக்கு?

……

04. மரம் சோலை என்பது போல மலைக்கு?

……

05. தென்னை தோப்பு என்பது போல தேயிலைக்கு?

……

06. கற்றாளையின் உள்ளீடு எவ்வாறு அழைக்கப்படும்?

……

07. மாதுளையின் உள்ளீடு எவ்வாறு அழைக்கப்படும்?

……

08. ஆடு மேய்ப்பவன் இடையன் என்றால் கப்பல் செலுத்துபவன்?

……

09. தேர் மற்றும் யானையை செலுத்துபவன் எவ்வாறு அழைக்கப்படுவான்?

……

10. விமானம் செலுத்துபவன் எவ்வாறு அழைக்கப்படுவான்?

……

11. தட்டிக் கொடுத்தல் எனும் பொருளில் அமைந்த மரபுத்தொடர்?

……

12. கண் திறத்தல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர்?

……

13. காது கொடுத்தல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர்?

……

14. நாக்கு நீளுதல் எனும் பொருளில் அமைந்த மரபுத் தொடர்?

……

15. செவிசாய்த்தல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர் யாது?

……

16. ஆயுள் முழுவதும் பிரமச்சரிய விரதம் காத்து வாழ்பவன் எவ்வாறு அழைக்கப்படுவான்?

……

17. சொற்களுக்குரிய பொருளை அகரவரிசைப்படி திரட்டித் தரும் நூல் ?

……

18. சொற்களுக்குரிய பொருளை செய்யுள் வடிவில் திரட்டித் தரும் நூல் ?

……

19. பிற்காலத் தேவைகளுக்காக பொருளை சேமித்து பாதுகாத்து வைப்பதை எவ்வாறு அழைப்பர்?

……

20.சலஞ்சலம் எனும் ஆயிரம் சங்குகளுக்கு நடுவே உள்ள உயர் சாதிச் சங்கை எவ்வாறு அழைப்பர்?

……

21. ஒருவரை பேணிப் பாதுகாத்துத் தருமாறு இன்னொருவரிடம் ஒப்படைத்தலை எவ்வாறு அழைப்பர்?

……

22. கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி, பிழை பார்த்து திருத்துவதை எவ்வாறு அழைப்பர்?

……

23. அறிஞர் பலர் கூடி வாதிடும் களம் எவ்வாறு அழைக்கப்படும்?

……

24. புராதன பொருட்களை சேகரித்து வைக்கப்படும் இடத்தை எவ்வாறு அழைப்பர்?

……

25. ஒரு தண்டிலே பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து எவ்வாறு அழைக்கப்படும்?

……

26. அனலில் இட்ட மெழுகு போல எனும் உவமைத் தொடர் தரும் பொருள்?

……

27. இலவு காத்த கிளி போல எனும் உவமைத்தொடர் தரும் கருத்து யாது?

……

28. உருத்திராட்சப் புனை போல எனும் உவமைத் தொடர் தரும் பொருள்?

……

29. காட்டில் எறிந்த நிலாப் போல எனும் உவமைத் தொடர் தரும் பொருள்?

……

30. சூரியனைக் கண்ட பனித்துளி போல எனும் உவமைத் தொடர் தரும் பொருள்?

……

31. அழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும் எனும் பழமொழி குறிக்கும் பொருள்?

……

32. ஆலையில்லா ஊருக்கு இருப்பைப் பூச் சக்கரை எனும் பழமொழி குறிக்கும் பொருள்?

……

33. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா? எனும் பழமொழி குறிக்கும் பொருள்?

……

34. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு எனும் பழமொழி குறிக்கும் பொருள்?

……

35. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியாது எனும் பழமொழி குறிக்கும் பொருள்?

……

36. தண்டாமரையினுடன் பிறந்துண் தண்டேன் நுகரா.. எனும் தொடரை சந்தி பிரித்து எழுதுக?

……

37. விலங்கியற்கை யில்லையெனில் யாமெலாம் விரும்பு மட்டினில்..எனும் தொடரை சந்தி பிரித்து எழுதுக?

……

38. **" போரெடுத்து வருமதன் முன்செல"** எனும் தொடரை சந்தி பிரித்து எழுதுக?

……

39. **" தேனருவி திரையெழும்பி வானின் வழியொழுகும்"** எனும் தொடரை சந்தி பிரித்து எழுதுக?

……

40. **" பங்கப் பழனத் துழுமுழவர்"** எனும் தொடரை சந்தி பிரித்து எழுதுக?

……

41. அடி எனும் சொல் பெயராகவும், வினையாகவும் வரும் வகையில் தனித்தனி வாக்கியங்கள் அமைக்குக?

……
……

42. படி எனும் சொல் பெயராகவும், வினையாகவும் வரும் வகையில் தனித்தனி வாக்கியங்கள் அமைக்குக?

……
……

43. உடு எனும் சொல் பெயராகவும், வினையாகவும் வரும் வகையில் தனித்தனி வாக்கியம் அமைக்குக?

……
……

44. படை எனும் சொல் பெயராகவும், வினையாகவும் வரும் வகையில் தனித்தனி வாக்கியம் அமைக்குக?

……
……

45. அடி எனும் சொல் பெயராகவும், வினையாகவும் வரும் வகையில் தனித்தனி வாக்கியம் அமைக்குக?

……
……

.45. கலை எனும் சொல் பெயராகவும், வினையாகவும் வரும் வகையில் தனித்தனி வாக்கியம் அமைக்குக?

……
……

46. மாடுகள் வயலை உழுதன. இவ் வாக்கியத்தை செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றுக?

……

47. புகழேந்தி நளவெண்பாவை இயற்றினார். இவ் வாக்கியத்தை செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றுக?

……

48. நான் கவிதை எழுதினேன், இவ் வாக்கியத்தை செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றுக?

……

49. பயிர் செய்கைக்காக காடுகளை மக்கள் அழித்தனர், இவ் வாக்கியத்தை செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றுக?

……

50. இராமன் இராவணனைக் கொன்றான், இவ் வாக்கியத்தை செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றுக?

……

51. பின்வரும் வாக்கித்தில் உள்ள எழுவாய், பயனிலையை இனங்காண்க

“ கணங்களின் பேராற்றலில் மின்னி மறைகின்றன பல்லாயிரம் எண்ணக் குவியல்கள்.

……
……

52. பின்வரும் வாக்கித்தில் உள்ள எழுவாய், பயனிலையை இனங்காண்க

“ மடைத்தலையில் ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம்

……
……

53. பின்வரும் வாக்கித்தில் உள்ள எழுவாய், பயனிலையை இனங்காண்க

“ அம்மாவின் மூக்குத்தி மின்னல் கீற்றினைப் போல மின்னியது

……
……

54. பின்வரும் வாக்கித்தில் உள்ள எழுவாய், பயனிலையை இனங்காண்க

அரைக் காசுக்கு போன மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது.

……
……

55. பின்வரும் வாக்கித்தில் உள்ள எழுவாய், பயனிலையை இனங்காண்க

“பரித் தேரேறி வாவென்றழைப்பான் போலவே கூவினவே கோழிக்குலம்

……..…

……..

56. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார். இது எவ்வகையான வாக்கியம்?

……

.57. வானக் கடலினில் வெள்ளி ஓடம் ஒன்று கண்டேன். இத் தொடரில் பயின்றுள்ள அணி யாது?

……..

58. தந்தை இறந்த செய்தியறிந்த பரதன் துன்பக் கடலில் மூழ்கினான். இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

……..

59. முகிலினங்கள் அலைகின்றனவோ, முகவரிகள் தொலைந்ததுவா? முகவரிகள் தவறியதால் அழுதிடுமோ அது மழையா? இங்கு பயின்றுள்ள அணி யாது?

……..

60. பளிங்கினால் செய்யப்பட்ட பதுமையைப் போல அவள் வாசலில் நின்றாள். இங்கு புலப்படும் அணி யாது?

……..

61. சுருக்கம் ஒன்றை எழுதும் போது தவிர்க்கப்பட வேண்டியவை

(கூறியது கூறல், மிகைபட கூறுதல், குறித்த சொல்லளவு, பிரதான கருத்து)

62. அவரப் பார்த்தா, உடன இங்க வரச் சொல்ல வேணும்.. இத் தொடரை நியம எழுத்து வழக்கில் மாற்றி எழுதுக?

……..

63. தமயந்தி கடி மாலை சூடினாள். இங்கு இடம்பெறும் உரிச் சொல் யாது? அது உணர்த்தும் பொருள் யாது?

……..

64. காலாவதி எனும் சொல்லை பொருள் புலப்படும் படியாக ஒரு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக?

……..

65. கர்ணனுக்கு நண்பன் துரியோதனன். இங்கு இடம்பெறும் வேற்றுமை உருபு யாது? அது எத்தனையாம் வேற்றுமைக்குரியது?

……..

66. பின்வருவனவற்றில் கூட்டுப் பெயராக அமையாத சொல்

(முயற்சி, வானொலி, பாடசாலை, பனையோலை)

67. மனவேதனை என்பது எவ்வகையான புணர்ச்சியாகும்?

……..

68. கடலலை என்பது எவ்வகைப் புணர்ச்சியாகும்?

……

69. மீன் சந்தை என்பது எவ்வகையான தொகையாகும்?

……

70. விரிகுழல் என்பது எவ்வகையான தொகையாகும்?

……

71. இலங்கை வென்றது. இது எவ்வகையான ஆகுபெயராகும்?

……

72. வெள்ளைப் பூனை காய்ச்சிய பாலை நக்கி நக்கி குடித்தது. இங்கு இடம்பெற்றுள்ள அடைமொழிகளை இனங்காண்க?

……

73. பின்வருவனவற்றுள் பெயராகவும், வினையாகவும் அமையக் கூடிய சொல்

(ஓடி, மறை, கொள், சல)

74. பின்வருவனவற்றில் அகச்சுட்டுக்கு உதாரணமாக அமையும் சொல்

(இக்கரை, எவன், இவர், அவ்வீடு)

75. வேகமாக நடந்து வந்த முதியவர் திண்ணையில் அமர்ந்தார். இங்கு இடம்பெற்றுள்ள பெயரெச்சம் ?

……

●●●●●●●